**மேட்டூர் சார்பு நீதிமன்றம்**

| | | |
|---|---|---|
| **O.S. No. 227/2014** | **Date :** 23.08.2023 | **DW1** |
| Name: காஞ்சனா | D/o. **குமரேசன்** | |
| Evidence Recorded Time: 01.06 P.M. to 1.16 P.M | | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

இதற்கு முந்தைய குறுக்கு விசாரணையல் உயிலை படித்து பார்த்ததாக கூறியுள்ளேன். அந்த உயிலில் தனக்கு பிதுர்ராஜ்ஜியமாகவும், சுயார்ஜிதமாகவும் கிடைத்த சொத்து என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த உயிலில் இந்த வழக்கு சொத்தையும் குறிப்பிட்டும், அது போக குதவை, பணம் லேவாதேவி ஆகிய சம்மந்தமாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். உயில் சாசனத்தில் என் அந்திமத்திற்கு பின்னும் என்னுடைய மூன்றாவது மனைவி பாப்பாயம்மாள் அந்திமத்திற்கு பின்னும் என் பெண் சந்ததிகளில் உயிருடன் இருக்கும் பெண் சந்திகளுக்கு மாத்திரம் நிலத்தில் பாத்தியம் கொண்டாட உரிமை உண்டு என்றும், துரதஷ்டவசமாக பெண் சந்ததிகள் காலவதியாகிவிட்டாலும் அல்லது அவர்களுக்கு சந்ததிகள் இல்லாவிட்டாலும், அந்த சொத்துக்கள் மீதியிருக்கும் பெண் சந்ததிகள் விகிதாசாரம் அடைந்து கொள்ளும் பாத்தியமே தவிர அவர்களுடைய புருச வர்க்கத்தார்களுக்கு இந்த சொத்தை அடைய பாத்தியம் இல்லை என்றும் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். துரைசாமிபிள்ளையின் மூத்தமகள் ராமக்காள் தாத்தா, பாட்டி பாப்பாயம்மாள் இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார் என்றால் சரிதான். ராமக்காளின் மகன்கள்தான் 8 ம் பிரதிவாதி ராமநாதபிள்ளை மற்றும் 6-ம் பிரதிவாதியின் இறந்து போன கணவர் தான் ஜோதிலிங்கம் என்றால் சரிதான். உயில் அடிப்படையில் பார்த்தால் 6 மற்றும் 8 ம் பிரதிவாதிகளுக்கு உயில் படி பாகம் இல்லை என்றால் சரிதான். வழக்கின் வாதிகள் சொத்தை பாகம் பிரித்து கொள்ளலாம் என்று 10 ற்கு மேற்பட்ட முறை கேட்டார்கள் என்றால் கேட்கவில்லை. வழக்கு சொத்துக்களை ஆறு பாகமாக பிரித்துக்கொள்வதில் எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரியல்ல, ஆட்சேபனை உள்ளது. என்ன ஆட்சேபனை என்றால் 6, 8 பிரதிவாதிகள் நிலத்தை விற்பனை செய்ததற்கும், அரசு நிலத்தை கையகப்படுத்திய போது அதற்கு செலவு செய்த

காப்பாற்றி வைத்துக்கொண்டதால் எனக்கு கூடுதலாக பங்கு வேண்டும் என்று கேட்கிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் ஆறு பங்கு பிரிப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/–DW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.